

Kanton Zürich
Bildungsdirektion

# பாடசாலைக்குப் போக ஆரம்பிக்கும் முன்பு நன்கு பராமரிக்கப்படும், பாடசாலைக்கு நன்றாக தயார்ப்படுத்தப்ப்டும

பெற்றோர்களுக்கான தகவல்கள் அடங்கிய தாள்

Tamilisch
தமிழ

## அன்பான பெற்றோர்களே

நீங்கள் உங்களுடைய பிள்ளை நல்லமுறையில் முன்னேற்றம் அடைவதையும் மேலும் வாழ்க்கையில் வெற்றியடைவதையும் விரும்புவீர்கள். பின்பு பாடசாலையில் வெற்றியடைவது எற்கனவே பிள்ளையின் வாழ்க்கையின் முதல் வருடங்களில் தீர்மானிக்கப்படுகிறது. உங்களுடைய அன்போடும், பாதுகாப்போடும் உங்களுடைய பிள்ளைக்கு ஆரம்பத்திலேயே மற்றப் பிள்ளைகளுடனான தொடர்பும், ஒரு உற்சாகமூட்டுகின்ற சூழலும் அதோடு வாய்ப்புக்களும் டொச் பழகுவதற்கு தேவை. ஸ்பில் குருப்பேக்கள் (பிள்ளைகள் கூட்டாக சேர்ந்து விளையாடும் இடங்கள்), கின்டர் கிறிப்பேக்கள் (குழந்தைகளை பராமரிக்கும் இடங்கள்) அதோடு டாகஸ் பமிலிகள் (பிள்ளைகளை பராமரிக்கும் குடும்பங்கள்) போன்றவை உங்களுடைய பிள்ளைக்கு இவை எல்லாவற்றையும் அளிப்பதோடு, உங்களுக்கு பிள்ளையைப்பற்றி எந்தக் கவலையுமில்லாமல் வேலைக்குப் போவதற்கான வாய்ப்பளிக்கின்றன.

### ஸ்பில் குருப்பேக்கள் (Spielgruppen) என்றால் என்ன மேலும் அவை என்ன வழங்குகின்றன?

ஒரு ஸ்பில் குருப்பேயில் 3 வயதிலிருந்து கின்டர் காடன் போக ஆரம்பிக்கும் வரையிலான 8 தொடக்கம் 10 பிள்ளைகள் இருக்கின்றன. இந்த ஸ்பில் குருப்பே கிழமைக்கு பல தடவைகள் நடைபெறும், 2 தொடக்கம் 3 மணித்தியாலங்கள் திறமைமிக்கவர்களினால் நடாத்தப்படும். இதற்கான கட்டணத்தை பெற்றோர்கள்தான் செலுத்த வேண்டும்.

### கின்டர் கிறிப்பேக்கள் (Kinderkrippen) என்றால் என்ன மேலும் அவை என்ன வழங்குகின்றன?

கின்டர் கிறிப்பேயில் 2 மாதத்திலிருந்து கின்டர் காடன் போக ஆரம்பிக்கும் வரையிலான பிள்ளைகள் திறமைமிக்க ஆசிரியர்களினால் பராமரிக்கப்படுவார்கள். கின்டர் கிறிப்பேக்கு பிள்ளைகள் கிழமைக்கு அரை நாள் தொடக்கம் 5 நாட்கள் வரை கிட்டத்தட்ட 10 வேறு பிள்ளைகளுடன் போவார்கள். உங்களுக்கு வேலை என்றால் உங்களுடைய பிள்ளை ஒரு கின்டர் கிறிப்பேயில் நன்கு கவனிக்கப்படும் மேலும் அதனுடைய முன்னேற்றத்திற்கு ஊக்குவிக்கப்படும். அதிகமான நகரசபைகள் இந்தக் கட்டணத்தின் ஒரு பகுதியை ஏற்பார்கள்.

### டாகஸ் பமிலிகள் (Tagesfamilien) என்றால் என்ன மேலும் அவை என்ன வழங்குகின்றன?

ஒரு டாகஸ் பமிலியில் உங்களுடைய பிள்ளை வீட்டில் இருப்பதைப் போல் பராமரிக்கப்படும் அதோடு அதிகமாக மேலும் வேறு பிள்ளைகள் விளையாடுவதற்கு இருப்பார்கள். நீங்களும் பராமரிக்கும் குடும்பமும் உங்களுடைய தேவைக்கேற்ப உங்களுடைய பிள்ளையை பராமரிக்கும் நேரத்தை எற்பாடு செய்யலாம். பிள்ளைகளை பாராமரிப்பவர் அனேகமாக எந்தக் கற்பிக்கும் பயிற்சியும் பெறாதவர், ஆனால் அதிகாரிகளினால் மேற்பார்வையிடப்படும். சில நகரசபைகள் கட்டணத்தில் பங்கெடுப்பார்கள்.

www.lotse.zh.ch இதன் கீழ் நீங்கள் மேலதிக தகவல்களையும் அதோடு அதில் எப்படி ஒரு வெற்றிடத்தை கண்டு பிடிக்கலாம் என்பதையும் காணலாம். டாகஸ் பமிலிகளை நீங்கள் இதில் காணலாம். www.vzt.ch/mitglieder

**© Amt für Jugend und Berufsberatung | Volksschulamt**
Gut betreut vor der Schule, gut vorbereitet für die Schule:
Informationsblatt für Eltern, 07/2015